திரு. கா. வேழவேந்தன் : தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிற நேரத்திலே அந்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அண்டை மாநிலமான ஆந்திராவுக்குப் போய்விடுகிறார்கள். அதற்குக் காரணம் ஆந்திரத்தில் பீடித் தொழிலாளர் ஊதியம் குறைந்துள்ளதுதான், இதனால் தமிழ் நாடு அரசிலிருந்து ஆந்திர அரசுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறதே, அதற்கு ஆந்திர அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, பதில் வந்திருப்பதாகத் தெரியவில்லை. எனினும், இதுபற்றி திட்டவட்டமாக விசாரித்தறிய முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

நிலமற்றவர்களுக்கு நிலங்கள்

*** 199 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1967 மார்ச் மாதத்திலிருந்து 13—12—1969-ம் தேதி முடிய எத்தனை நிலமற்றவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டில் 1967 மார்ச் மாதத்திலிருந்து 31—12—1969-ம் தேதி முடிய சாகுபடிக்காக 86,518 பட்டாக்கள் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, 1957-ஆம் ஆண்டிலேயுள்ள சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகளைப் பார்க்கிறபோது அப்பொழுது ஏழை மக்களுக்குப் பட்டா வழங்குவதற்குத் தனித்தாசில்தார்கள் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அரசு அப்படி இருந்துவிட்டது, ஆனால் நம்முடைய அரசு ஏழை மக்களுடைய அரசாக இருக்கிற காரணத்தினாலே இதிலே அதிகமான அக்கறை வைத்து மிக அதிகமான வேகத்துடன் செயல் படுகிறது என்பது இதிலிருந்து தெரிகிறது அல்லவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வியிலேயே பதில் இருக்கிறது, அப்பொழுது செய்யவில்லை, இப்பொழுது செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தக் கேள்வி நேரத்தைப்பற்றி நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்படுவதுபற்றி வருவாய்த் துறை மானியத்திலிருந்து இன்னும் பல தலைப்புகளிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியிலே இருபது உறுப்பினர்கள் துணைக்கேள்விகள் கேட்க விரும்புகிறார்கள் என்று தெரிகிறது. நாம் பத்து மணிக்குள் இந்திரா நகர் பஸ்ஸிலே சென்று தமிழ் அர்ச்சனைவரை போகவேண்டும். (சிரிப்பு)

ஒவ்வொரு கேள்விக்கும் நான்கைந்து துணைக்கேள்விகள் என்ற முறையிலே சில முறைகளை அனுசரித்து சில தொகுதிகளைப்பற்றி சில மாவட்டங்களைப்பற்றி இருந்தால் அதைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பது, மதுரை

அயைப்பற்றி இருந்தால் அந்த உறுப்பினர்களுக்கு, நெசவாளர்களைப்பற்றி இருந்தால் அதைப்பற்றியவர்களுக்கு, வக்கீல்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு இப்படிக் கொடுக்கப்படுகிறது. எல்லோரும் துணைக் கேள்விகள் கேட்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் சில நேரங்களிலே கேள்விகள் முடிக்க முடியாமல் போய்விடக்கூடும்.

இன்னும் இங்கே உரத் தொழிற்சாலை போன்ற முக்கியமான கேள்விகள் இருக்கின்ற காரணத்தினாலே சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். எல்லோரும் அழைக்கப்படவில்லையென்பதால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கவேண்டாம். சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்க நினைக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள் வட்டங்களை வட்டங்களாக்கல்

* 200 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரைக்குடி, விருதுநகர், இராஜபாளையம் ஆகிய உள் வட்டங்களை தாலுக்காக்களாக மாற்றி, வேலை முறையைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா உள்வட்டங்களையும் வட்டங்களாக்குவதற்கு எல்லா கோட்டாட்சி தலைவர்களிடமிருந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் செயற்குறிப்புகள் கேட்டிருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே திருப்பத்தூர் தாலுகாவிலிருந்து காரைக்குடி, சாத்தூர் தாலுகாவிலிருந்து விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலிருந்து இராஜபாளையம் இவைகள் இப்போது சப்-தாலுகாக்களாக அமைக்கப்பட்டு, இந்தக் குறிப்பு வருகிறவரையில் காத்திராமல் இவைகளையெல்லாம் அப்கிரேட் செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொதுத் தேர்தலுக்காக இவையெல்லாம் ஒத்திவைக்கப்பட்டு தேர்தல் முடிந்து விட்ட பிறகு இப்போது அவை பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

Review on work of Export Promotion Councils

* 201 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether any special Committee appointed by the Central Government to evaluate the working of the Export Promotion Councils visited Madras on or about the 3rd May 1971; and

(b) if so, the details thereof?